மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. பாயிண்டு ஆப் ஆர்டர் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

திரு. பி. வேலுசாமி: அதற்குப் பின்னால் ஒரு அறிக்கை வந்தது. அந்த அறிக்கையில் மாறான செய்தி வெளிவந்திருக்கிறது. சரியான செய்தியை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. முதல் அமைச்சர் அவர்கள் வந்திருக்கும்பொழுது விளக்கம் கேளுங்கள். அப்பொழுது அதற்குப் பதில் சொல்ல முடியும். இது பாயிண்டு ஆப் ஆர்டரின் கீழ் வராது.

திரு. பி. வேலுசாமி: அந்த செய்தியோடு சம்பந்தப்பட்டவன் நான். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் இப்பொழுது இங்கில்லை. நீங்கள் விளக்கம் கேட்கிறீர்கள். விளக்கம் பெறுவதற்கு முதல் அமைச்சர் இருக்கும்பொழுது கேட்டுக்கொள்ளுங்கள்.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) சட்டப் பேரவை மண்டபத்தில் கட்சிவாரியாக ஒதுக்கப்பட்ட இருக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு சட்டப் பேரவை மண்டபத்தில், கீழே குறிப்பிடும் இருக்கைகள் கட்சிவாரியாக ஒதுக்கியிருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் (ஆர்கனைசேஷன்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கை எண்கள்: 185, 186, 187; 191; 192; 193; 199; 200; 201; 207; 208; 215; 216; 223; 224; 225; 231; 232; 239; 240; 242; 243; 244; 245-லிருந்து 260 வரை.

சுதந்திராக் கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண்கள் : 188, 189, 195, 196, 203; 204; 210; 211; 21; 218, 219, 226, 227.

கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்ருக்கும் இருக்கையின் எண்கள்: 190, 190-அ; 197; 198; 205; 206; 214, 222, 230, 238.

காங்கிரஸ் (ரூலிங்) கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டி பட்டிருக்கும் இருக்கையின் எண்கள் : 131, 137, 138, 145 153, 161, 169, 177.

பார்வர்ட் ப்ளாக் கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டி ருக்கும் இருக்கையின் எண்கள் : 132, 139, 146, 154, 162, 170, 178.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டி ருக்கும் இருக்கையின் எண்கள் : 133, 140, 147, 148.

கம்யூனிஸ்ட் கட்சி (வலது) உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட் ருக்கும் இருக்கையின் எண்கள் : 134, 141, 149.

முஸ்லீம் லீக் கட்சியின் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டி ருக்கும் இருக்கையின் எண்கள் 135, 142.

சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்க்கு ஒதுக்கப்பட் டிருக்கும் இருக்கையின் எண் : 136.

தமிழரசுக் கட்சியின் உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண் : 136-அ.

குடியரசு கட்சி உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக் கையின் எண் : 144.

சுயேட்சை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக் கையின் எண்கள் : 150, 151, 159.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு அவைத் தலை வரின் இடது பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண்கள்: 152, 155; 156; 157; 158; 160; 163, 164, 166, 167 171 172 173, 174, 175, 176, 179; 180; 181 மேலும் வலது பக்கத்தில் இருக் கைகளின் எண்கள் அப்படியே கொடுக்கப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் நாளைக் காலையில், அவரவர்கள் தனித் தனியாக தங்கள் தங்கள் இருக்கையில் அமருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ஆலடி அருணா : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். பாராளு மன்றத்தில், ஆளும் கட்சி காங்கிரஸ், எதிர்க்கட்சி காங்கிரஸ் என்று இருக்கிறது. ஆனால் இங்கே இரண்டு காங்கிரசும் எதிர்க்கட்சியா கவே இருக்கின்றன. ஆகவே, அவற்றை எதிர்க்கட்சி 1, எதிர்க் கட்சி 2 என்று குறிப்பிடுவதா என்பதற்கு சபாநாயகரின் கட்டளை யைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது.

1970 மார்ச் 23]

Thiru K. VINAYAKAM : Sir may I pay a great tribute and thanks to the Speaker, because I raised this subject yesterday? On behalf of our party, I think the Speaker for having cleared the atmosphere and restored normal order in the House.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: பேரவைத்தலைவர் செய்ய வேண்டிய கடமையைச் செய்திருக்கிறார்கள். அதற்கு உறுப்பினர்கள் நன்றி தெரிவிக்க வேண்டிய நிலை இல்லை.

திரு. கே. விநாயகம் : அது எங்கள் கடமை.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : சரி அடுத்து, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை திரு. ஆசைத்தம்பி அவைக்கு அளிப்பார்கள்.

(4) கோவை நிகழ்ச்சிகள் பற்றி நடந்த விவாதத்தில் முதல் அமைச்சர் தங்களைப்பற்றி குறிப்பிட்டது குறித்து திரு. க. ர. நல்லசிவன் எழுப்பிய பிரச்சினை.

திரு. க. ர. நல்லசிவன்: நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். திரு. வேலுசாமி கோவை ஜில்லாவில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றிச் சொன்னார்கள். முதல் அமைச்சர் இங்கே பேசும்போது எங்களுக்கு மாசு கற்பிக்கும் முறையில் பேசியிருக்கிறார்கள். ஆகவே. . . .

மாண்புமிகு பேரவைத்தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி அவர்கள் ஒரு 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' எழுப்பியபோது, ஏதாவது விளக்கம் பெறவேண்டும் என்றால், மாண்புமிகு முதல் அமைச்சர் அவையில் வந்திருக்கும்போது, விளக்கம் கோரலாம் என்று சொன்னேன். அது பாயிண்ட் ஆப் ஆர்டர் கீழேயோ, அல்லது ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற வகையில், விதி 42-ன் கீழேயோ வராது என்று தீர்ப்பு அளித்திருக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் வந்த பிறகு அவரிடத்தில் விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பொழுது திரு. ஆசைத்தம்பி மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அவைமுன் வைப்பார்கள்.

திரு. க. ர. நல்லசிவன்: முதல் அமைச்சர் எங்களை நிலச்சுவாந்தார்கள் கையாள்களாக உபயோகித்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் தரப்பில் உறுப்பினர் சொல்வதை ஆட்சேபிக்கிறேன். முதல் அமைச்சர் 'மாசு கற்பித்தார்' என்று சொல்வது தவறு. அதை அவர்கள் வாபஸ் பெற வேண்டும். 'முதலாளிகள் கையாட்கள்' என்று சொன்னதாகச் சொன்னார்கள். அதையும்